Phone: No. 4502
விலை முக்காலணா

Regd: No. M. 5458
இலங்கை 8 சதம்

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: மு. கருணாநிதி

விளம்பர விகிதம்

அங்குலம் பத்தி ஒன்று ரூ. 5-0-0 நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு.

மானேஜர்
"மாலை மணி"

மாலை 2 | சென்னை: 12—5—51 சனிக்கிழமை ★ வெளியூர்: 13—5—51 ஞாயிற்றுக்கிழமை | மணி 155

நெசவாளர்க்கிழைத்த பெருந் துரோகம்

காங்கிரஸ் அமைச்சரின் விபரீதப் பேச்சு

................(ஃ)................

16-ஆந் தேதி பொதுவேலை நிறுத்தம் செய்யுமாறு வேண்டுகோள்

————(:0:)————

நெசவாளர்களின் நியாயமானகோரிக்கைகள்

சென்னை, மே 12—

நெசவாளர்கள் அறப்போர் துவங்கி இன்றுடன் 27 நாட்களாகின்றன. இதுவரை ஆண்களும் பெண்களுமாக, 700 பேர் இவ்வறப் போரில் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர். எல்லாமாவட்டங்களிலும் இந்த அறப்போருக்கு ஆதரவு காட்டப்பட்டிருக்கிறது. ஆயிரக் கணக்கானவர்கள் இப்போரில் கலந்துகொள்ளப் போட்டியிட்டுக் கொண்டு முன்வருகின்றனர்.

அரசாங்கப் பணிமனை, அமைச்சர் இருப்பிடம் முதலியவற்றின் முன் அமைதியாக மறியல் செய்வது, "அரசாங்கக் கொள்கையின் காரணமாக நெசவாளர்களாகிய நாங்கள் பிச்சை யெடுக்கிறோம்" என்று எழுதப்பட்ட அட்டையை மார்பில் தொங்கவிட்டு முக்கியமான இடங்களில் பிச்சை எடுப்பது, தங்கள் துன்பத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டச் சிறு குழுவினராக ஊர்வலம் செல்வது, தெருவில் பாட்டுப்பாடிக் கதைகள் கூறும் முறையைக் கைக்கொண்டு நெசவாளரின் தொல்லையை மக்களிடம் விளக்குவது, முதலியவைகளே நெசவாளரின் அறப்போர் முறைகள்.

இந்த அறப்போரை அடக்க, ஊர்வலத்தையும் பாட்டுப்பாடி கதைசொல்வதையும் மறியலையும் பிச்சையெடுப்பதையும் தடியால் அடித்துத் தடைசெய்வது, வேடிக்கை பார்க்கும் மக்களைத் தடியால் அடித்து இம்சிப்பது, காலையில் கைது செய்யப்படும் நெசவாளர்களைப் போலீஸ் லாக்கப்பில் குடிக்கத் தண்ணீரோ உண்ண உணவோ கொடுக்காமல் இரவுவரை வைத்திருப்பது, பிறகு இவர்களை நள்ளிரவில் நகருக்கு வெளியே நெடுந்தொலைவில் கொண்டுபோய் இருட்டில் தனித் தனியே ஒருவரோடொருவர் சந்திக்க முடியாதபடி விட்டுவருவது முதலியவை சென்னை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகள்.

நெசவாளர்கள் எதற்காக இந்த அறப்போரை நடத்துகின்றனர்? அவர்கள் கேட்பதெல்லாம் தங்களுக்கு வேலை செய்ய நூல்; பட்டினியின்றி வாழ வழி. இதற்கு அரசாங்கம் தரும் பதில் தடியடி; போலீஸ் சிறைவாசம்; பட்டினி போட்டு தாகத்தைத் தணித்துக் கொள்ள நீரும் தராமல் நள்ளிரவில் கும்பிருட்டில் காட்டில் கைவிடுதல்.

நெசவாளர் இயக்கத்தினர் தங்களுடைய குறைகளை வெளியிட்டுள்ளனர், அதாவது, (1) உள்நாட்டுக்கு வேண்டிய ஜவுளியில் 3-ல் ஒரு பாகத்தைக் கைத்தறி நெசவாளர் உற்பத்தி செய்யவேண்டுமென ஒதுக்க வேண்டும். (2) சென்னை மாகாணத்துக்கென மாதந்தோறும் 29780 பேல் கட்டு நூல் ஒதுக்கப்பட்டு, ஒழுங்கான முறையில் நெசவாளர்களிடம் நூல் வந்துசேருமாறு விநியோகிக்கப்படவேண்டும். (3) பருத்தி நூல், கைத்தறி ஜவுளி

(4-ம் பக்கம் பார்க்க)

மகன் கம்யூனிஷ்ட் என்பதால், அவன் தாயின் சொத்துக்கள் ஏலம்!

................(0)................

வெள்ளையன் ஆட்சியில் நடக்கா அட்டூழியம்!

............(x)............

அகிம்ஸா ஆட்சியினர் அநீதி

தூத்துக்குடி கம்யூனிஷ்ட் கட்சி ஆர்கனைசிங் கமிட்டிக் கன்வீனர், தோழர் எஸ். அலங்காரம் அறிவிப்பதாவது

8-5-51 மாலை 3-30 மணிக்கு ஒரு லாரி நிறைய, ரிசர்வ் போலீஸ் படைசூழ திருநெல்வேலி ஜில்லா கம்யூனிஷ்ட் சதிவழக்கை நடத்தும் அதிகாரிகள் தோழர் பயில்வான் அருணாசலம் (பிரபல கம்யூனிஷ்ட்) வீட்டில் புகுந்தனர். தோழர் அருணாசலம் நெல்லை ஜில்லா கம்யூனிஷ்ட் சதிவழக்கில் ஒரு எதிரி தற்பொழுது தலைமறைவாக இருக்கிறார். அதற்காக அவர் வீட்டுச் சாமான்களைப் பறிமுதல் செய்தனர். அவர் சரணடைய வேண்டுமாம். இல்லையென்றால் வீட்டை ஏலம் போடுவார்களாம். வீட்டிலுள்ள 67 சாமான்களை (குடிக்கக் குவளைகூட இல்லாமல்)யும், அவருடைய தாயார், தகப்பனாருடைய (உடுத்தியிருந்ததைத் தவிர) ஆடைகளையும் எடுத்துச் சென்றுவிட்டனர். மாற்று உடைகூடத் தரவில்லை ராம ராஜ்ய அதிகாரிகள்.

தோழர் அருணாசலத்தின் உடைமை எதுவும் அவ்வீட்டில் கிடையாது. அவருடைய தாயார், தகப்பனார், தம்பி, தங்கை போன்றவர்களுடைய உடைமைகளைத்தான் எடுத்துச் சென்று அவர்களைத் தவிக்க விட்டிருக்கிறார்கள். இவர்கள் செய்த குற்றமென்ன? தோழர் அருணாசலத்தைப் பெற்றதுதான். அல்லது சகோதரராகவும், சகோதரியாகவும் இருப்பதுதான். சொத்துக்கள் தாயாருக்குத்தான் இருக்கிறது. இப்படியிருந்தும் சொத்துக்களை ஏலம் விடுவார்களாம். இந்த அதிகார வர்க்கப் போக்கை நிறுத்தும்படியும், சொத்துக்களை உடனே திருப்பிக் கொடுக்குமாறும், சென்னைச் சர்க்கார் முதன் மந்திரியையும் சட்ட மந்திரியையும் கேட்டுக் கொள்வதோடு, ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்கச் சகல கட்சிகளையும், இயக்கம் நடத்துமாறு கோருகிறேன்.

பட்டினிக்குப் பச்சிளங்குழவிகள் பலி

கோவை, மே 11—

கோவை ஆர். எஸ். புரம் சிவசுப்பிரமணியச் செட்டியார் வீதியில் இருக்கும் ஏழைக் குடும்பத்தினைச் சேர்ந்த இரு குழந்தைகள் இரண்டு நாளாகப் பட்டினியால் வாடியதின் காரணமாக 2-5-51 புதன் மாலை 5-30 மணிக்கு மயக்கத்தால் கீழே விழுந்துவிட்டன. ஒரு குழந்தை வயது 2-ம் மற்றொன்றுக்கு 6 மாதமும் ஆகிறது. அக்குழந்தைகளுக்கு அவ்வீதி வழியாகச்சென்றுகொண்டிருந்தவர்கள் உணவளித்தனர். பின்னர் மயக்கம் தெளிவுற்று அவ்விரு குழந்தைகளும் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மாலைமணி

சென்னை 12—5—51 சனிக்கிழமை

பந்தல் ஆடுகிறது!

பகவத்சிங்குகளின் எலும்புகளைத் தூண்களாக நட்டு, திருப்பூர் குமரன்களின் நரம்புகளைக் கீற்றுகளாக முடைந்து போட்டு அமைக்கப்பட்ட அழகான பந்தல். காந்தீயக் காந்த விளக்குகள் மின்னிட—வ. உ. சிதம்பரத்தின் தியாகத் தோரணங்கள் அசைந்தாடிட அலங்கரிக்கப்பட்ட அருமை மிகு பந்தல். அந்தப் பந்தலிலே அஹிம்சை ஆலவட்டம் சுழல—சத்திய சாமரங்கள் வீச—அன்னை சுதந்திரதேவி கொலு வீற்றிருக்கப் போகிறாள் என்று சொல்லிடக் கேட்டோம். சிந்தை குளிர்ந்தோம். தேவியும் வந்தாள், வான் முட்டும் வந்தே மாதர கோஷத்துடன்! தேவி—சுதந்திரதேவி-அகண்ட கண்களை விசாலமாக்கி அருகிருக்கும் அன்பர்களை அருள் பாலித்து அரியாசனத்தமர்ந்தாள்.

தேவிக்குப்படையல்...பூஜைக்குத் தயார் என்று பூஜாரிகள் எழுந்தோடினர். மணி முழங்கிற்று மந்திரங்கள் ஒலித்தன. ஆசியாவின் மாணிக்கம் அகில இந்தியாவின் முடிசூடா மன்னர் தேவியின் பிரதம குருக்கள் பண்டிதநேரு பூஜாச்சாமான்களுடன் வந்தார். 'ஏற்றுக்கொள் தாயே' என்று படையலைக் காட்டினார். பார்த்தாள் தாய். படபடவென அடித்துக் கொண்டது அவள் இதயம். பளிச்சிடும் மின்னல் கண்டதுபோல் கண்ணை மூடிக் கொண்டாள்.

பழு எலும்பு புறப்பட்ட பஞ்சைகள். பார்வை மங்கிப்போன பசிகாரர்கள். குடல்கருகிய குழந்தைகள். செத்துக் கொண்டிருக்கும் ஜீவன்கள். "இறப்புலகில் இன்பம் காண்போம்" என்று இவ்வுலகை வெறுத்த பிணக் குவியல்கள். சோறு கிடைக்காதவர்—சுகம் தெரியாதவர்-இப்படி ஒரு படையல்.

சிறைக்கோட்டம். அங்கேசெம்மறியாடுகள் போல் அடைக்கப்பட்டிருக்கும் 'இந்தியப் பிரஜை'கள். செக்கிழுக்கும் மாடுகளென மனிதர்கள். இப்படி ஒரு விருந்து தேவிக்கு!

தடுப்புக் காவல் சட்டம்-வகுப்புவாரி உரிமைக்கு வைத்த கொள்ளிக் கட்டை—எழுத்துரிமைக்கு போடப்பட்ட முள் வேலி—பேசாதே என வாயைப் பொத்தும் இரும்புக் கரங்கள்—இப்படி ஒரு சாப்பாடு சுதந்திர அன்னைக்கு!

தேவி ஆடினாள்—கிடுகிடென ஆடினாள்—நடனமல்ல; நடுக்கத்தால் மிரண்டு ஆடினாள். அவள் சிங்காதனம் ஆடிற்று—மேடை ஆடிற்று—பந்தலும் ஆட ஆரம்பித்துவிட்டது—ஏன் ஆடாது?

சுதந்திரம் சுவையான சொல் ஆயிற்றே...பொன் கூண்டில் அடைபட்டிருப்பதைவிட மண் தரையில் உலவுவது மேல் என்பார்களே—அவ்வளவு சோபிதமான வார்த்தையல்லவா சுதந்திரம்—அதை சோக வார்த்தை ஆக்கி விட்டார்களே; சுக மண்டபத்தைச் சூது சுரங்க மாக்கிவிட்டார்களே; சுழன்றன கேள்விகள். கேள்விகளா அவை...... சூருவளிக் காற்று! ஆட ஆரம்பித்த பந்தல் அடியோடு விழுவதற்குப் புறப்பட்ட புரட்சிப் புயல.

அதோ...எத்தனை தூண்கள் விழுந்துவிட்டன. கிரபளானி—கோஷ்—பிரகாசம்-ஓமாந்தூரார்-காணவில்லை தொண்டாற்றும் இந்தத் தூண்களை! நாடு, துன்பக் கேணியான பிறகும் தேவிக்குப் படையல் செய்யும் துன்மார்க்க முறையை தொடர் கதையாக்க விரும்பாதவர்கள் வெளியேறி விட்டனர். எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தால்தான் என்ன; நல்லவர்கள் வெளியேறி விட்ட பிறகு நாங்களும் இருக்கிறோம் என்று எந்தக் கட்சியாலும் நடித்துக் கொண்டிருக்க முடியாது. இது காங்கிரஸ் கட்சிக்கு விதி விலக்கல்ல, தேசியப்பந்தல் ஆட ஆரம்பித்துவிட்டது. புயல் வீசுகிறது. மழை கொட்டுகிறது. பந்தல் விழத்தான் போகிறது. விழுந்து விட்ட பிறகு நிச்சயமாக நிமிர்த்தி வைக்க முடியாது.

இந்தப் பந்தல் சேலத்து தி. மு. கழக மாநாட்டில் விழுந்த பந்தல் அல்ல. பகலிலே பந்தல் விழுந்தது மாவீரர் கூடினர். மாலையில் அதே பந்தலில் மாநாடு துவங்கியது. தி. மு. கழகத்தார் சொல்வீரர் மட்டுமல்ல; செயல்வீரர் என்பதையும் காட்டிக்கொள்ள விழுந்தது அந்தப் பந்தல். காங்கிரஸ் பந்தல் எவராலும் தூக்கி நிறுத்த முடியாத அளவுககு—காந்தியாரே திரும்பி வந்தாலும் காப்பாற்ற முடியாத அளவுக்கு-சாயப் போகிற பந்தல்.

ஆடும் பந்தலுக்குள்ளிருந்து அதிகார வேட்டுக்கள் கிளப்புகிறார்கள்—ஆணவ மொழி பேசுகிறார்கள்—அடக்கு முறை வீசுகிறார்கள்—நாம் அவர்களுக்கு முதலில் நினைவு படுத்துகிறோம்: பந்தல் ஆடுகிறது; விழப் போகிறது—பார்த்து நடவுங்கள் என்று!

சுழல் விளக்கு

-[மாலுமி]-

பழம் புளிக்கிறதாம்

தாவித் தாவிப் பார்க்கிறது. குதித்துக் குதித்து ஒப்கிறது. தன்னையுமறியாமல் நாவிலே நீர் வழிகிறது. இதோ ஒரு பாய்ச்சல் வேகமாக! வலுவையெல்லாம் திரட்டி! முழுசக்தியுடன்! ஆகா திராட்சைக் குலை கிடைக்கப்போகிறது. "தடார்"...அய்யோ பாவம்...தரை பள்ளமாகப்போனதே தவிர தணியாத தாகம் அடங்கவில்லை. சுற்று முற்றும் பார்க்கிறது. கோபக் கண்களை சுழற்றுகிறது. ஏமாற்றத்தால் எரிச்சல் உருவமாகிறது "ஆகா! அபூர்வமான பழம்" என்று வர்ணித்த அதே நாக்கு "சீ சீ, இது புளிக்கும்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறது சவாக்கத்தி போல புரளும் நாக்கு அந்த நரிக்கு.

பழமைப்பாசி, நாடகம் முதலிய கலைத்துறைகளின் வழியாகவல்லவா தமிழகத்தைச் சீரழித்தது. நாமும் அதே நாடகங்களின் வாயிலாகட பழமையைக் கொளுத்துவோம். புதுமையைச் செதுக்குவோம். நாலு மாநாடுகள் ஒரு நாடகம் அண்ணாவின் சந்திரோதயம், ராதாவின் போர்வாள்...பின்னர் வரிசை வரிசையாக வீரக்குரல் எழுப்பிய இயக்கப்பிரசார நாடகங்கள். திராவிடம் ஒளி பெற நாடகமும் ஒரு நல்ல விளக்கு என்பதை நாட்டுக்கு காட்டினோம். சாம்ராஜ்யங்கள் சரிந்ததை நாடகமாக்கினோம். முடியுடை மூவேந்தர் வீழ்ந்த கதையை நடித்துக்காட்டினோம். மாவீரன் சிவாஜி-அவன் மராட்டிய மண்டலம்-மறையோதும் பட்டரால் மண்ணாகிப் போன சோகத்தை மேடையிலேற்றினோம். மறைக்கட்பட்ட சரித்திரங்களை மக்கள் மன்றம் கொண்டுவந்தோம். கலையை வலையென விரித்து திராவிடர் நிலையை மாற்றியது வஞ்சகம்! கலை கருத்துக்கு என்பதை விளக்கி, திராவிடரின் குனிந்த தலையை நிமிர்த்தியது நாம். அந்த அழியாத பெருமை நமக்கு என்றைக்குமுண்டு.

நாடகம் எழுதத் தெரியாது, நடிக்கவோ நடுக்கம். நடித்தாலும் அந்தக் கருத்து பிடிப்பதில்லை மக்களுக்கு. தாவித்தாவிப் பார்க்கிறார்கள். எட்ட முடியவில்லை. ஏக்கத்தின் எதிரொலியாக எழுகிறது; "இவர்கள் நாடகமாடிகள். நாட்டுக்கு நன்மை செய்ய நாடகத்தாலா முடியும்? கேள்விப்பட்டதில்லையே இந்தக் கேலிச் செய்தியை" என்ற கிண்டல்கள். பழம் புளிக்கிறது என்ற மெட்டிலே தயாரித்தபாட்டு. பரிதாபப்படுகிறோம் நாம்.

இலக்கிய உலகத்தின் மேதைகள்—இனிய கருத்துக்களை எழுப்பியவர்கள்—இப்சன், மோலியர், ஷேக்ஸ்பியர் ஆகியவர்களை முதலில் அந்த நாட்டு மக்கள் மதிக்கத்தானில்லை. அவர்கள் நாடகம் நையாண்டி செய்யப்பட்டது முதலில்! புதுமை உலகை-புரட்சி இலக்கியத்தை முளைக்கச் செய்தவர்கள் என்ற அழியாப் புகழை இப்போது பெற்றவர்கள் அவர்கள் தான். ரஷ்ய நாட்டில் புஷ்கின் எழுதிய ஓரங்க நாடகங்கள் உணர்ச்சிக் கலைகள். ரஷ்ய எழுச்சிக்கு வித்துக்கள். இரண்டாம் உலகப் போரிலே விடுதலை விருத்தம் பாடிய வீரர்கட்கு நரம்பை முறுக்கேற்றிவிட்டது நாடகங்களும் நல்ல திரைப்படங்களும்தான்.

இந்தக் கதைகளெல்லாம் கிணற்றுக் குள்ளிருக்கும் தவளைக்குத் தெரிவதில்லை. இருட்டு வந்ததும் கத்துகிறது. இல்லாவிட்டால் நரியாக மாறி பழம் புளிக்கும் என்று பாடுகிறது. அய்யோ பாவம்!

துணிவர்ங்க வந்தவர்களைத் துரத்தியடித்த போலீசார்

——(o:)——

மஞ்சள் பெட்டியில் — ஓட்டுப்போட்டதன் பலன்

திருமங்கலம், மே 11—

இவ்வூரில் மே 8-ந் தேதியிலிருந்து கட்டுப்பாடு விலையில் 4 கடைகளில் துணி கொடுக்கப்பட்டது. இதற்காக, காங்கிரஸ் ஆட்சியில் துணிப் பஞ்சத்திலடிபட்ட மக்கள்-அக்கடைகள் முன்திரண்டு விட்டனர்.

கடைச் சொந்தக்காரர்கள், இருப்பில் கொஞ்சத்தைப் பொது மக்களுக்கு—நானும் விநியோகம் செய்தேன், என்று ஒப்புக்குச் சொல்லக் கொடுத்துவிட்டுப் பெரும்பாகத்தைப் பணக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும்-கடைச் சொந்தக்காரருக்கும் கொடுத்துவிட்டுப் பொதுமக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கினார்கள்.

இதற்காக மக்கள் ஒன்றுதிரண்டு "ஒழுங்காகத் துணி கொடு, அல்லது கடையை மூடு, காங்கிரஸ் ஆட்சி செய்வது செல்வந்தர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தானா?" என்றெல்லாம் கேட்டனர்.

இதற்காகப் போலீஸார் மக்கள் குறைகளைக் கேட்காது கடைச் சொந்தக்காரர்களுக்கு அனுகூலமாகக் கூடியிருந்த மக்களை, கிழவரென்றும், வாலிபரென்றும் பெண்கள்-குழந்தைகளென்றும் பாராமல் கண்மூடித்தனமாக ஓடி ஓடித் தாக்கினாராம்.

மக்கள், போலீஸின் இத்தகையச் செய்கையைக் கண்டித்தும், "மஞ்சள் பெட்டியில் ஓட்டுப் போட்டதன் பலன் இதுதானா?" என்றும் பேசிக்கொண்டனராம்.

கேரளத்தில் நம் இயக்கம் காலூன்றி விட்டது

……………(0)……………

மத்திய ஆட்சியைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும்

…………………………

கேலி செய்யும் அரசியல்வான்கோழிகளுக்கு எச்சரிக்கை

…………(-)…………

நமது கட்சி பாட்டாளிகள் கட்சியே

சேலம், மே, 5—

சேலம் மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டில் தலைமை தாங்கிய தோழர் ஜான் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் இறுதிப் பகுதி வருமாறு:—

"வங்கத்தைப் பொறுத்தவரை பலதிறப்பட்ட வசதிகளையும், வாய்ப்புகளையும் மத்திய அரசாங்கம் செய்து கொடுக்கிறது."

"நல்மிளகும், கயிறும் நமக்குத் திரவியந் தேடித்தருவன. அந்தப் பொறுப்பையும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது அஞ்சல்சேவிங்ஸ் இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மூலம் ஏழு கோடி ரூபா நாம் இழக்கவேண்டியிருக்கிறோம் இந்த நிலையிலும் இந்திய சர்க்கார இந்தப் போக்கையே கடைப்பிடிக்குமானால் "சுதந்திரகேரள வாதத்தைக் கிளப்பும் கட்சிவளராமல் என்செய்யும்?"

"எனவே பொருளாதார ஒப்பந்தத்தின் சில பாகங்களை இந்திய அரசாங்கம் நடைமுறையில் கொண்டுவரவில்லை என்ற காரணங்களைக் காட்டி இந்திய அரசாங்கத்திற்கெதிராக சுப்ரீம கோர்ட்டில் கேஸ் தொடுப்பதுகூட நியாயமல்லவா என்று எனக்குத் தோன்றுகிறது?

தோழர் ஆர். சங்கரின் ஆவேசப் பேச்சில் சற்று காரசாரமான உண்மைகளைக் காண்கிறீர்கள். மத்திய அரசாங்கத்தின் போக்கால் "சுதந்திரகேரளர் அதாவது வடநாட்டுப் பிணைப்பை வெட்டியெறியும் தனிநாடு முழக்கத்தை நாம் கேட்கிறோம், "வடநாட்டு ஆதிக்கம் ஒழிக" சங்கர் இப்படிக் கூறவில்லையே தவிர அவரது பேச்சின் வாசகங்கள் இந்த மூலமந்திரத்தை முழங்கத்தவறவில்லை. அதோடுகூட அவர் அமையவில்லை, மத்திய அரசாங்கத்தைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிவிடக்கூடத் துடித்திருக்கிறார். இந்தத் துடிப்பின் இன்னொரு அலை மோதுவதையும் கவனியுங்கள்.

"திருவிதாங்கூர்-கொச்சி இணைப்புக் காலங்களில் பல எதிர் பார்ப்புகளை மத்திய அரசாங்கம் நமக்களித்தது. நம்மைக் குளிப்பாட்டி, உணவில் மட்டும் 80 லட்சம் ரூபாய் அவர்கள் தட்டிக்கொண்டுபோய் விட்டார்கள். இந்தக் கருத்தை வெளியிட்டவர், திருவிதாங்கூர் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அசம்பிளி அங்கத்தினர்களில்ஒருவரான சிவராம பிள்ளையவர்கள்

மத்திய அரசாங்கம்ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டது. 80 லட்சம் ரூபாய் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள், இந்தக் கருத்தை தானே சிவராமபிள்ளையின் பேச்சு நமக்குத் தெரிவிக்கிறது.

திரு கொச்சி சமஸ்தானத்தின் நிதி மந்திரி தோழர் ஏ. ஜே. ஜான் அவர்கள் விடுத்த அருக்கையில் நிலைமையை மேலும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"வெளியினின்று இறக்குமதி செய்யும் அரிசியை விற்பனை செய்வதற்கு அரசாங்கத்திற்குள்ள நஷ்டத்தின் 75 சதமானம் வரை சப்ஸிடியாகத் தரலாம் என்று ஒப்பந்தம் இருக்கிறது. முதல் சப்ஸிடி அக்டோபர்மாதம் 1948 பட்டம் தாணுப்பிள்ளை மந்திரியாக இருந்தபோது கிடைத்தது. அரிசிக்கு மட்டும்தான் சப்ஸிடி தருகிறார் மைலோ, கோதுமை இந்த இனங்களிலுள்ள நஷ்டத்தை நாம்தான் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையில் நமக்கிது வரையுள்ள நஷ்டம் $5\frac{1}{2}$ கோடி. ஒன்றரை கோடிதருகிறோம் என்று இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும்கூட $3\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டத்தைத் தாங்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த ஜனவரிக்குப் பிறகு சுமார் 3 லட்சம் டன் இரண்டாம்தரம் அவர்கள் அரிசி அனுப்பித்தார்கள். அதை நாம் செலவாக்கியும் விட்டோம் ஆனால் இது செலவழிந்து கொஞ்சம் வாரங்கள் கடந்த பிறகு அது முதல் தரம் அரிசி என்றும் எனவே அதன் விலையில் உள்ள வித்தியாசத்தை நாம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். ஜனவரிக்குப் பிறகு தினசரி 2 லட்சம் ரூபாய் என்ற முறையில் நமக்கு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் நமக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நஷ்டம் ஓராண்டில் சுமார் 7 கோடி ரூபாய் ஆகும். இந்தத் தொகை நமது வருமானத்தில் நேர் பகுதியாகிறது! இப்படியே வரவுக்கு நேர் பகுதியை வீணாக்கிக்கொண்டிருந்தால் நாட்டின் க்ஷேமத்திற்கான ஏனையக் காரியங்களுக்குப் பொருளுக்கு எங்கே போவது?

நிதி அமைச்சர், மத்ய அரசாங்கத்தின் பேராசை மனப்பான்மையை, வடநாடு தென்னாட்டைச் சுரண்டுவதில் காட்டும் அக்கறையைத் தனது பேச்சின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

வடநாடு தென்னாட்டைச்சுரண்டுவதையும், தென்னாட்டின் சுதந்திரத்தை நசுக்குவதையும் தோழர்கள் கொச்சி அசெம்பிளி அங்கத்தினர்கள்-மந்திரிகள் உள்படக் கண்டிக்கத் தவறவில்லை! முன்னேற்றக் கழகத்தினர். கூறுகின்ற கருத்துக்கள்-இன்றைய தினம் தோழர் கொச்சி அசெபிளியில் பேசப்படுவது காணமகிழ்கிறோம்! நிச்சயம் நமது கருத்து தென்னாடு திராவிடருக்கே என்ற லட்சியம் மெல்ல மெல்ல இங்கரும்புகிறது! இக்கருத்தைத் திருவிதாங்கூரின் தலைசிறந்த தினசரிப் பத்திரிகையான "கேரள கௌமுதி" தனது தலையங்கத்தின் மூலம் வெளிக்காட்டியிருக்கிறது.

"உணவு விஷயத்தில் மத்திய அரசாங்கம் காட்டும் இந்தப் போக்கு எந்தவிதத்திலும் உகந்ததாயில்லை"

வட இந்தியாவின் சுரண்டலை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று சென்னைமாகாணத்தில் திராவிட இயக்கத்தினர் தீவிரப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். டில்லி ஆட்சியின் அமைப்பு முறை வடநாடு தென்னாட்டைச் சுரண்டும் முறையில்தான் அமைந்திருக்கிறது என்று ஏ. கே. கோபாலன் அவர்கள் அண்மையில் வெளியிட்டதோர் அறிக்கை கூறுகிறது. இந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது எங்களால் இந்தக் கருத்தோடு ஒன்று சேராமலிருக்க முடியாது என்றே தோன்றுகிறது"

நான் கூறுகிற இலட்சியத்தைக் "கேரள கௌமுதி" மலையாளத்தின் தினசரி இதழ்களே பேசுகிறது. ஆம்! நமது இலட்சியம் கேரளத்தில் ஒலிக்க ஆரம்பித்து விட்டது! பயந்தும், தயங்கியும் ஆரம்பித்திலே எழுதும் இந்தப் பத்திரிகைகள் துணிவாக 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று தலையங்கம் தீட்ட நீண்ட நாட்கள் பிடிக்காது என்று நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்!

இதுமட்டுமல்ல, மார்ச்சு மாதம் 11-ம் தேதி கோட்டயத்தில் வைத்து இடதுசாரிகள் மாநாடொன்று கூட்டியிருக்கிறார்கள். அந்த மாநாடு, வடநாட்டு ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு பொருளாதார, சமூக, அரசியல் தொடர்பை அறுத்தெறிந்து தனிச்சுதந்திரம் பெற்ற கேரள நாட்டை நிறுவ வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது! வடநாட்டு வியாபாரிகள் டாட்டா, பிர்லா—இவர்களின் சுரண்டலால் கேரளநாடு சீரழிந்த வகையைப்பற்றிய விளக்க உரைதான் மாநாட்டின் மையப் பொருளாக அமைந்திருக்கிறது!

எனவே தோழர்களே! கேரள நாட்டில் நாம் காலூன்றிவிட்டோம்! தூவிய நமது கட்சி விதை முளைக்க ஆரம்பித்து விட்டது! இன்னும் சில ஆண்டுகள் அதற்குள்ளாக நமது இலட்சிய நாட்டை நாம் அடைவோம், என்று உங்களுக்கு உறுதி தர என்னால் ஓரளவு இயலும் என்று சொல்லிக்கொள்வதற்காகப் பெருமைப் படுகிறேன்!

சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களும் மந்திரிகளும் பேசும் பேச்சுக்கள் நமது முழக்கத்தின் மறு ஒலியாக அமைந்திருப்பதை நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்! நம்மைப் பார்த்து, அரசியல் கேலி கிளப்பிய வான்கோழிகள் மறைவிடம் தேடி ஒதுங்கிக்கொள்ளட்டும்! நீர்ப்பாம்புகள் தலையுயர்த்த வேண்டாம் என்று, எச்சரித்துக் கூறுகிறேன்.

அவர்கள் நமது இயக்கத்தை ஏன் எதிர்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

தோழர்களே! தேர்தல் நெருங்குகிறது! மழையிலேயிருந்து கிளம்பும் புற்றீசல்கள் போல கட்சிகள் கிளம்பும்! மக்கள் மத்தியிலே செல்வாக்கற்றவர்கள், தேர்தலுக்காக கட்சி அமைத்துக்கொண்டு பவனி வர ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த பித்தலாட்டக்காரர்களைப் பற்றி நாம் அறிவோம். பொதுமக்கள் இவர்களை அளந்துவைத்திருக்கிறார்கள்! பொதுமக்களின் வாக்குரிமை பெற்று சட்டசபை நாற்காலிகளை அலங்காரப்படுத்தியும், பொதுமக்களை மறந்தும், சுயஇலாபம் தேடுவோராக இந்த கனவான்கள் மாறியதும் பொதுமக்கள் அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட முடியாது! சிலகாலம் பலரை ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எக்காலத்திலும் ஏமாற்ற முடியாதல்லவா?

பதவிக்காகவும் பணத்திற்காகவும் மனச்சாட்சியைப் பூட்டுப் பூட்டி, அதன் திறவுகோலை நமது எதிரிகளின் கையிலே ஒப்புவித்து விட்டவர்களைப்பற்றி நீங்கள் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள்!

வாக்குரிமை! மகத்தான ஆயுதம்! கூரேறிய அந்த ஆயுதம் தனி நபரின் பிறப்புரிமையின் தற்காப்புக் கேடயம்! ஜீவாதாரமான பொருள்! அதை உபயோகிப்பதிலேதான் நமது மனிதத் தன்மையை, அபிமானத்தை நாம் வெளியிலே காட்டுகிறோம்! பாகு மொழிக்கும் பண மழைக்கும் அஞ்சி, வயப்பட்டு இந்த ஆயுதத்தை நழுவவிடுவோமானால், உங்களது மனிதத்தன்மைக்கு எதிராக உள்ள உங்களின் அறைகூவல் அது என்பேன்! நமக்குத் தெரியும் எங்கு, எப்பொழுது, யாருக்காக அந்த வாக்குரிமையை அளிப்பது என்று. நமது கட்சியைப் பொறுத்தவரை தேர்தலிலே போட்டியிடப் போவதில்லை என்றே நாம் தீர்மானித்திருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை இந்த மாநாட்டிலும் நான் வற்புறுத்துவதற்காகப் பெருமைப்படுகிறேன்! ஜனநாயகம் ஒரு நாட்டிலே தழைக்க வேண்டுமானால், நிச்சயம் அந்த நாட்டு மக்கள் தனது பொறுப்பைப்பற்றி, சுதந்திரத்தின் தேவைகளைப் பற்றி ஜனநாயகத்தின் பண்பாட்டைப்பற்றி அரசாங்கத்திற்கும், தமக்குமுள்ள தொடர்பைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் சர்வஜன ஓட்டுரிமையிலே அர்த்தமிருக்க முடியும் என்று நம்புபவன் நான். அல்லாதவரை ஜனநாயகம்

கேரளத்தில் நம்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கேலிக் கூத்தாகவே கருதப்படும்! ஜனநாயகம் வளராது! வாழாது!

நாம் இன்றைய தினம் செய்து வரும் பணி, நல்ல ஓர் அரசாங்கத்திற்கு ஏற்ற நல்ல பிரஜைகளாக மக்களை மாற்றிக்கொண்டு வருகிறோம்! ஜனநாயக அரசாட்சியில், தமக்குள்ள கடமைகளையும், உணர்ந்தவர்களாக மக்களை ஆக்கும் பணியிலே ஈடு பட்டுவருகிறோம்! எனவே இன்றைய தேர்தலிலும், அதன் வெற்றியிலும்நம்பிக்கையில்லாதவர்கள் நாம்! நாம் தேர்தலிலே நிற்கப் போவதில்லை என்பது நிச்சயமாக நீண்ட காலத் திட்டமல்ல! நமக்குத் தெரியும்போது, மக்களின் மன வளமும், அறிவு வளமும் நம்மைத் தூண்டும்போது நாம் தேர்தலிலே நிற்கத்தான் போகிறோம். அந்த நாள் திராவிடக் கூட்டாட்சிக்கு அடிப்படை நாளாகவும் அமையும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நிச்சயமாக நான் கருதுகிறேன், தேர்தல் விரும்பிகள் யாருமே கிடையாது; தப்பித் தவறியும் இருக்கமாட்டார்கள்! அப்படியே தப்பித்தவறி ஒன்றிரண்டு பேர்கள் இருந்தாலும் வெளிப்படையாகவே உங்களின் அனுமதி பெற்றுக் கொண்டு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்! "இதோ இருக்கிறது, வெளியே போகும் வழி வெற்றிகரமாக வெளியேறுங்கள்" என்பதுதான்.

நான் இதைக் கூறுவதன் நோக்கம், நாம் இன்றைய நிலைமையில் சட்டசபைகளிலே சென்றாலும் எதையும் சாதித்துக்கொள்ள இயலாது! இன்றைய சமுதாய அமைப்பு இப்படியே இருக்கும் வரை, ஜமீன்—முதலாளித்துவ, நிலச் சுவான்தார் ஆதிக்கம் ஒழியாதவரை யார் அரியணையிலே அமர்ந்தாலும் எந்தவிதமான பலனும் ஏற்படப்போவதில்லை! ஆக, இன்றைய சமுதாய அமைப்பை மாற்றுவோம்! மாற்றவே உணர்ச்சியை, அதன் தேவையைப் பொது மக்களுக்கு விளக்குவோம்! அதன் மூலம் நாட்டின் எதிர்காலத்தை வளமுள்ளதாக மாற்றுவோம்!

அந்தப் பணிதான் நமக்கு முக்கியமே தவிர சட்டசபையை அலங்கரிப்பதல்ல. நமக்குத் தெரியும், சட்டசபையை நிரப்பும் பணி கடினமானதல்ல! ஆனால் எதிர்பார்க்கும் பலன் என்ன அது கைகூடுமா என்பதுதான்!

இன்றையதினம் சென்னை மாகாணத்தில்—தென்னிந்தியாவிலேயே தலை சிறந்த அரசியல் கட்சியாக வளர்ந்து வந்திருக்கும் நாம், எதிர்காலத்தைப் பற்றி அடிக்கடி—சிந்தித்துத் தீரவேண்டிய நிலைமையில் கொண்டு நிறுத்தப்பட்டு இருக்கிறோம்!

எனவே, இந்த மாநாடு நிச்சயம், எதிர்காலத்தைப் பற்றிய திட்டம் தீட்டுவதன்மூலம், நமது பிரச்னையை சுலபமாக்கும் என்று நாம் நம்பலாம்!

குறிப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தெரிவிக்கிறேன் நமது கட்சி பாட்டாளிகள் கட்சி! தொழிலாளர் தம் வாழ்வே நம் மூல கோஷம்! இங்கிலையில் நமது முயற்சி தொழிலாளர் ஸ்தாபனங்களையும் தொழிலாளர்களையும், ஒன்றாக்கி இணைத்து, ஸ்தாபன ரீதியாக நாம் முன்னேற வேண்டும் என்பதென் நோக்கம்! தொழிலாளர் நலனுக்கென மிகுதியும் உழைப்போம்!

நமது உயிர்ப் பிரச்னையாக, வகுப்புரிமை நீதி தவிர்க்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும்! அரசியல் சட்டத்திலே ஏற்படுகின்ற மாற்றத்திலேதான் வழியிருக்கிறது! எனவே நாம் அரசாங்கத்தை எச்சரிக்கிறோம், இந்தக் கல்லூரி விடுமுறை முடிவடைவதற்கு முன்னாலேயே, தகுந்த மாற்றத்தை, அரசியல் சட்டத்திலே கொண்டுவர வேண்டும் என்று. இல்லாவிட்டால், அது நம்மை நேரடி நடவடிக்கைப் பாதைக்கிழுத்தேதுமோ என்று ஐயப்படுகிறோம்! தோழர்களே!

கடைசியாக, நான் உங்களுக்குக் குறிப்பிட விரும்புவது மாகாண மாநாடுபற்றி; ஜூலையிலே, மாநாடு கூட்டுவதென்று செயற்குழு தீர்மானித்திருக்கிறது. பெரும்பாலும் அந்த மாநாடு நமது இறுதி நோக்கத்தை விரைவுபடுத்தும் மாநாடாகவே அமையும்! நாம் நம்புவோம், நமது வெற்றிக்கு அம்மாநாடுகள் கால்கோள் நாட்டும் என்று!

முன்னேறிச் செல்லுகின்ற நமக்கு வழிகாட்டியாக, அண்ணா அவர்களிருக்கிறார்கள்! அவர்களிடும் பணியைச் செய்து முடிப்பதிலே நாம் ஆர்வம் காட்டுவோம்!

தாய்மார்களே! நாட்டுப் பிரிவினைக்கு உங்கள் பங்கு சாமான்யமானதல்ல! ஏற்படும் கஷ்டநஷ்டங்களைப்பொருட்படுத்தாது, நாட்டின் நலம் கருதி நீங்களும் உழைப்பீர்களாக!

மாணவத் தோழர்களே நீங்கள் எதிர்காலத்திற்குற்ற துணைவர்கள்! கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இருக்கின்ற நீங்கள், நாட்டின் தேவை உங்களை அழைக்கும்போது அண்ணா அவர்களின் குரல்உங்களை "வருக" என்று வரவேற்கும் போது புரட்சிப் புயலிலே குதிப்போம்! அதுவரையிலே நீங்கள் நன்றாகப் படியுங்கள், விஞ்ஞான ஆராய்ச்சியிலீடுபடுகள்! சிறந்த அறிவாளிகளாக மாறுங்கள்! எதிர்கால திராவிடத்திற்கு விஞ்ஞானிகள், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் தேவை! அந்தக் குறையை நீங்களே போக்கவல்லவர்!

கடைசியாக, இங்கு குழுமியிருக்கும் அத்தனை பேர்களும் திராவிட நாட்டைத் தனியாக்குவதில், முயற்சிக்கவேண்டும். இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளேயே நமது நாட்டை நாம் அடையும் மார்க்கங்களை அண்ணா அவர்கள் நமக்குக் காட்ட வேண்டும்! அதன் வழி நின்று போராடி, வெற்றிபெற நாம் ஆயிரமாயிரமாக இருக்கிறோம் என்று அண்ணாவுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலே இருக்கின்ற இன்றைய அதிருப்தியான நிலையை மாற்றிப் புது சமுதாய அமைப்பை நாம் ஏற்படுத்துவோம், பேதம் நீங்கிய நிலையினராக வாழ்வோம்!

வாழ்க திராவிடம்!

நெசவாளர்க்கிழைத்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலியவற்றிற்கு விற்பனை வரி விதிக்கப்பட்டிருப்பதை ரத்து செய்யவேண்டும். நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் முதலியவற்றின் மூலதனப் பங்குகளுக்காக நெசவாளர்களுக்குக் கடன் தர வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்றுதான் நெசவாளர்கள் அறப்போர் நடத்துகின்றனர். இந்த அறப்போரைத்தான் மனிதத் தன்மையற்ற முறையில் நாகரிகப்பண்பாடு சற்றுமற்றமுறையில் அரசாங்கம் அடக்குகிறது எனினும் இந்த அறப்போரை அமைதியான முறையிலேயே தொடர்ந்து நடத்துவதென்று அறப்போர்க் குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர்.

16-ந் தேதியன்று இந்நாடு முழுவதும் நெசவாளர்களுக்கு அனுதாபம் காட்டும்முறையில் பொது வேலை நிறுத்தம் செய்யுமாறு நாட்டிலுள்ள அனைவரும் வேண்டிக் கொள்ளப் பட்டிருக்கின்றனர், அன்றைய தினம் நாடெங்கும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

நெசவாளர்களின் நிலைமையும் அவர்களுடைய அறப் போரும் அரசாங்கத்தின் அடக்கு முறையும் இவ்வாறிருக்க, ஆரணியில் சென்னை அரசாங்கப் பொது மராமத்திலாக்கா அமைச்சருக்கு கறுப்புக்கொடி காட்டி வரவேற்கப்பட்டபோது அவ்வமைச்சர், நெசவாளிகளின் உயிர்ப்பிரச்னையாயுள்ள நூலைப்பற்றிக் கூறுகையில், "நம் நாட்டில் உற்பத்தியாகும் நூல் அனைத்தையும் நம் நாட்டிலே வைத்துக்கொண்டிருப்பதென்பது முடியாத காரியம்" என்று புத்திசாலித்தனமாகக் கூறினர்.

நாட்டில் உற்பத்தியாகும் நூல் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துவிட்டு, இங்குள்ள நெசவாளர்கள் வேலையில்லாமல் பட்டினிகிடந்து, சாகுமாறு செய்வதுதான் இந்த மந்திரிகளால் முடியும் காரியம் போலிருக்கிறது. ஆக இந்த மந்திரிகள் நம் நாட்டு நெசவாளர்களைக் கொல்ல வேண்டுமென்னும் கருத்துடனேயே இங்கு உற்பத்தியான நூல்களையெல்லாம் வடநாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு மக்கள் கிளர்ச்சி செய்தபோது, எருமைமாட்டு முதுகின் மீது மழை பெய்த நிலைமையிலிருந்தனர்போலும்!

நெசவாளர்கள் இங்கு உற்பத்தியாகும் நூல் அனைத்தையும் இங்கேயே நிறுத்திவிடவேண்டுமென்று கோரவில்லை. அவர்கள் கோருவதெல்லாம் இங்கு நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களை நிறுத்திக்கொண்டு மீதியை மட்டுமே ஏற்றுமதி செய்யவேண்டும்என்பதுதான் இந்த அரிச்சுவடி கூடத் தெரியாத பேர்வழி மந்திரிப் பதவி வகிப்பதும், நூல் கேட்கும் மக்களிடம் அசட்டுத்தனமான பதில் அளிப்பதுமான நிலையில் நம் நாடு இருந்தால் நம் நாடு உருப்படுவது எங்ஙனம் முடியும்?

இனி நடப்பவை

மீர்சாகிப்பேட்டை, சென்னை:- 13-5-51 காலை 9 மணிக்கு வள்ளுவர் இலவச வாசகசாலை சார்பாக நடக்கும் சொற்பயிற்சிக் கூட்டத்தில் கே. சின்னக்கண்ணு மற்றும் பலர் "கலையும் வாழ்வும்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோளம்பாக்கம்:-13-5-51 மாலை திருவள்ளுவர் மன்றச் சார்பில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் கே. டி. கண்ணப்ப முதலியார் "கிராம முன்னேற்றம்" பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

* * *

மணப்பாறை:-13-5-51ல் தி மு க. பொதுக் கூட்டத்தில் இரா. சு. தங்கப்பழம் பேசுவார்.

* * *

கீழச்சந்தைப்பேட்டை:13-5 51 ஞாயிறு மாலை 6-மணிக்கு தி. மு. இளைஞர் மன்ற இரண்டாவதாண்டு துவக்க விழா நடைபெறும். அது போது, எஸ். வி. மாணிக்கம், ல. வ. கிருட்ணன், கலைத்தூதன், எம். அய்யாச்சாமி, வை. சுப்ரமணியன், கி. மனோகரன் மற்றும் பலர் பேசுவர்.

மாணவர் இலக்கிய மன்றம்

சென்னை, திருவல்லிக்கேணி:— இம்மன்றத்தின் துவக்கவிழா 4—5—51 அன்று மாலை தோழர் ஆ. எ. கணபதி பி. எ. எல் டி. அவர்கள் தலைமையில் நடந்தது. தோழியர் சி சாரதா பாவர்கள் இயற்கை வாழ்த்துப் அடலுடன் துவங்கியது கூட்டம். தோழர் ஆறுமுகம் அவர்கள் தலைவரைக் கூட்டத்திற்கு அறிமுகப் படுத்தினர். தோழர்கள் மா. ரா. இளங்கோவன், பி. எஸ். வெங்கட்ராமன் ஆகியோர் "சமூக சேவை" என்பதுபற்றிப் பேசினர். பின்னர், மன்ற உறுப்பினர்களுள் மணி, காந்தா, திக்காராம், இந்திராணி, சண்முகம் ஆகியோர் "கல்விச் செல்வம் பொருட்செல்வம் இவற்றுள் எது சிறந்தது?" என்பதுபற்றி உரையாடினர். இறுதியாக தோழியர் சி. சாரதா நாட்டு வணக்கம் பாட, தோழா ஆறுமுகம் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street, Madras-1.